கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கடலூர்

**O.S.No.138/2020** தேதி: **02.02.2026**

வாதி தரப்பு சாட்சி -1 (மோகனகிருஷ்ணன், த/பெ.ராம்தாஸ்) சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**1** ஆம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

(1) எதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் எனது தாத்தா கொடுத்த சொத்தை நான் எனது மணைவிக்கு தான செட்டில் மெண்ட் மூலம் கொடுத்ததை கிருஷ்ணராஜ்க்கு விற்ற பிறகு அதில் பிரச்சனை ஏற்பட்டதால் அந்த கிரையம் செல்லும் என்பதை நிறுபிக்க வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் என்ன தொழில் செய்துவருகிறேன் என்றால் விவசாயம் பார்த்து வருகிறேன். எனக்கு பூர்வீகம் என்ன ஊர் என்றால் கடலூர் ஆகும்.

(2) வழக்கு சொத்து எந்த ஊரில் உள்ளது என்றால் கடலூாரில் உள்ளது. பிரதிவாதிக்கும் எனக்கும் எப்படி பழக்கம் என்றால் பேச்சு வார்த்தை மூலம் தெரியும். நான் 2ஆம் பிரதிவாதிக்கு பவர் பத்திரம் எழுதிக்கொடுததேன் என்றால் சரிதான். 2 ஆம் பிரதிவாதிக்கு என்ன தொழில் என்றால் நகைகடை மற்றும் ரியல் எஸ்டேட்டும் செய்து வந்தார். ரியல் எஸ்டேட் தொழிலில் இருப்பவர்கள் பவர் எழுதி வாங்குவது வழக்கம் என்றால் எனக்கு தெரியாது. ஆனால் என்னிடம் பவர் எழுதி வாங்கி நிலத்தை விற்று தருவதாக கூறினார். பவர் எழுதி வாங்கின போது முன் பணம் ஏதும் எனக்கு கொடுத்தாரா என்றால் இல்லை.

(3) பவர் எந்த ஆண்டு எந்த மாதம் எழுதிக்கொடுத்தேன் என்றால் எனக்கு ஞாபகம்

PHEBE B Digitally signed by PHEBE B Date: 2026.02.02 17:44:57 +0530

இல்லை. பவர் எழுதிக்கொடுத்ததில் ஏதேனும் நிபந்தனைகள் இருந்ததா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை.

ஆவணங்கள் ஏதும் தாக்கல் இல்லை.

குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது .

மறுவிசாரணை இல்லை.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவரிடம் கையொப்பம் பெறப்பட்டது.

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be correct.*

PHEBE B Digitally signed by PHEBE B Date: 2026.02.02 17:45:05 +0530

***Additional District Munsif , Cuddalore.***